AstroVed

# சத்வித்யா

மாலை: 1 மலர்: 11

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.

மாதம் இரு முறை வெளிவரும் பிப்ரவரி 1முதல் 15வரை

ஆன்மீக விஞ்ஞான இதழ்



## தேய்பிறை அஷ்டமி வழிபாடு

- ★ அரசியலில் புகழ்பெற
- ★ அரிய ஆன்மீக தகவல்
- ★ மூலிகை ரகசியம்
- ★ பிப்ரவரி மாத ராசிபலன்கள்

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்

மேலும் விபரங்களுக்கு போன்: 88702 88701, www.astroved.com


# சத்வித்யா



நம் இந்தியத்திருநாட்டில் "இல்லாதவர்கள் எனப்படுகின்ற ஏழைகள் அதிகம் உள்ளனர். இந்த நிலையை மாற்றவே ஒரு மந்திரத்தை விஸ்வாமித்திரர் அருளியிருக்கிறார். மன்னனாய் இருந்து ரிஷியாய் மாறிய விஸ்வாமித்திரர் மக்களின் வறுமையைப் போக்கும் ஓர் எளிய மந்திரத்தை எமக்கு அருளினார். அதுவே ஸ்ரீம் பிரிஸி Shreem Brzee என்னும் மந்திரம். இந்த மந்திரத்தை தொடர்ந்து உச்சரிப்பதன் மூலம் தரித்திரம் நீங்கி, செல்வ வளம் பெருகும்.

~ Dr. Baskaran Pillai

சத்வித்யா நேயர்களே புத்தாண்டு பிறந்து, பொங்கலும் பொங்கி, உலகமக்கள் யாவரும் பயன்பெறும் வகையில் கொடிய தொற்று நோய்க்கு தடுப்பு மருந்தும் கண்டுபிடிக்கப்பட்டு, அதனை பயன்பாட்டுக்குக் கொண்டுவந்துள்ளனர். புண்ணிய பூமியாம் நம் பாரததேசம் அந்தக் கொடிய தொற்றால் சந்தித்த கொடுமைகளினின்று மெல்ல மெல்ல மீண்டு வருகிறது. என்பதனை நாம் நன்கறிவோம், இந்த அளவில் நமது மக்கள் மீள்வதற்குக் காரணம், நமது பாரம்பர்ய மருத்துவ முறைகளும் நமது ஆன்மிக சிந்தனைகளும் தான், அப்படிப்பட்ட சிந்தனைகளை மென்மேலும் வளர்த்திடவும் மக்களிடம் நல்ல நெறிகள் வளர்ந்திடவும் நமது சத்வித்யாவின் பணிகள் இன்றுபோல் என்றென்றும் தொடரும் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



அன்புடன்

(அச்சிட்டு வெளியிடுவோர்)
ஆஸ்ட்ரோவேட்.காம்

# தேய்பிறை அஷ்டமி வழிபாடு.

## ஆபத்தில் இருந்து காக்கும் தேய்பிறை அஷ்டமி வழிபாடு.

மனிதர்களின் வாழ்க்கையில் கஷ்டங்கள் ஏற்படுவது இயல்புதான். அப்படி நமக்கு ஓர் கஷ்டம் ஏற்படும்போது நாம் சோர்ந்து போக வேண்டாம், துவண்டுவிடவும் வேண்டாம். சிவ பெருமானின் அம்சமாக தோன்றிய பைரவரை வழிபட்டு, ஆபத்துகளில் இருந்தும் கஷ்டங்களில் இருந்தும் விடுபடலாம்.

## ரௌத்திர வடிவான பைரவ மூர்த்தியின் அவதாரம் எப்போது நிகழ்ந்தது?

அந்தகாசுரன் என்னும் அசுரன்  தேவர்களையெல்லாம் துன்புறுத்தி இன்பம் கண்டான். தேவர்களை மட்டுமல்லாமல் முப்போதும் சிவ சிந்தனையில் திளைத்திருக்கும் முனிவர்களையும் விட்டு வைக்கவில்லை. தேவர்களையும், எப்போதும் தன்னையே நினைத்திருக்கும் முனிவர்களையும் துன்புறுத்தும் அந்தகாசுரனை அழிக்க திருவுள்ளம் கொண்ட சிவபெருமான், தம்முடைய திருமுகங்களில் ஒன்றான தத்புருஷத்தில் இருந்து மகா பைரவ மூர்த்தியைத் தோற்றுவித்தார். அவரே அந்தகாசுரனை வதம் செய்து தேவர்களையும் முனிவர்களையும் காப்பாற்றினார்.  கர்வம் கொண்ட பிரம்மதேவரின் தலையைக் கொய்தவரும் பைரவர்தான்.



ஒருமுறை தாருகாவனத்து முனிவர்களின் ஆணவத்தை அழிக்க நினைத்த சிவபெருமான், பிட்சாடன மூர்த்தியாக வடிவம் ஏற்றுச் சென்றார். அவரால் தங்களுக்கு ஏற்பட்ட அவமானத்தைத் தாங்கிக்கொள்ள முடியாத முனிவர்கள் சிவபெருமானை அழிக்க முயற்சித்தனர்.

கடும் கோபம் கொண்ட சிவன் காலாக்னியால் தாருகாவனத்தை அழித்தார். இதனால் உலகம் முழுக்க இருள் பரவி சூரியனும் மறைந்து போனது. அப்போது பைரவ மூர்த்தியே எட்டுத் திசைகளிலும் தோன்றி ஒளியை உண்டாக்கினார்.

இப்படி எட்டுவிதமாகத் தோன்றிய பைரவர்கள் அஷ்ட பைரவர்கள் என்று பூமியில் வணங்கப் படுகிறார்கள். ருரு பைரவர், சண்ட பைரவர், குரோதன பைரவர், உன்மத்த பைரவர், சம்ஹா ர பைரவர், பீக்ஷன பைரவர், கபால பைரவர் என எட்டு பைரவர் மட்டுமின்றி ஆதிசைவர்கள் 64 விதமான பைரவர்களையும் வணங்கி வந்துள்ளார்கள் என புராணங்கள் கூறுகின்றன.

அஷ்டமி வழிபாடு, ஆபத்திலிருந்து காக்கும் என்பார்கள். அஷ்டமி வழிபாடு பைரவருக்கு இஷ்டமானது. அதிலும் தேய்பிறை அஷ்டமி என்பது மரண பயத்தை நீக்கும் அற்புதமான வழிபாடு. அன்றைய தினம் பைரவரை வணங்கிட, வேண்டும் வரங்கள் எல்லாம் கிடைக்கும்.

பைரவர் சிவனின் 64 வடிவங்களில் மகாஞானியான, ரௌத்ர தோற்றம் கொண்டவர். எல்லா சிவாலயங்களிலும் பைரவர் இருப்பார். இன்னும் சொல்லப்போனால் பைரவரே கோயிலின் காவல் தெய்வமாகவும் இருப்பவர். எல்லா சிவாலயங்களிலும் ஆலயம் திறந்தவுடனும், இரவு கோயில் மூடப்படும்போதும் பைரவ பூஜை செய்வார்கள்.



சிவன் சொத்துக்களை காவல் காக்கும் அதிகாரியும் இவரே. நாயை வாகனமாகக் கொண்டு அனேகமாக திகம்பரராக காட்சி தருபவர். கால பைரவர், கோர பைரவர், உக்ர பைரவர், சொர்ணாகர்ஷண பைரவர், யோக பைரவர், ஆதி பைரவர், ஜுர பைரவர் என பலவாறு ரூபம் கொண்டவர்.

சனீஸ்வரனின் குருவாகவும், காலத்தை கட்டுப்படுத்திடும் தேவனாகவும் இருப்பவர் பைரவர். பன்னிரண்டு ராசிகள், அஷ்ட திக்குகள், பஞ்ச பூதங்கள், நவகிரகங்கள் என எல்லாவற்றையும் கண்காணிக்கும் ஆதி தெய்வம் பைரவர். காசி நகரமே பைரவரின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவும், அதனால் தான் அங்கு இறப்பவருக்கு மோட்சம் கிடைப் பதாகவும் சொல்லப்படுகிறது.

நீலநிற மேனியரான பைரவர் பாம்பை முப்புரி நூலாகத் தரித்தவர். மண்டை ஓட்டு மாலை அணிந்தவர். சூலம், பாசம், மழு, கபாலம் ஏந்தியவர். திருமுடியில் பிறைநிலவு சூடியவர். பிரம்ம சிரச்சேதர், க்ஷேத்திரபாலகர், வடுகர், ஆபத்துதாரணர், காலமூர்த்தி, கஞ்சுகன், திகம்பரன் என்று பல திருப்பெயர்கள் பைரவருக்கு இருப்பதாக புராணங்கள் கூறுகின்றன.

அகங்காரத்தை அழிக்கும் கடவுளாகவும், சுக்கிர தோஷத்தை நீக்கும் இறைவனாகவும் பைரவர் விளங்குகிறார். அஷ்டமி நாளில் இவரை வணங்கினால் எண்ணியது நடக்கும். தடைகள் யாவும் விலகும். ஏழரைச் சனி, அஷ்டமச் சனி யாவும் பைரவரை வணங்கினால் நன்மையாக முடியும்.

தாமரை, வில்வம், தும்பை, செவ்வந்தி, சந்தன மாலைகள் பைரவருக்கு விருப்பமானவை. பரணி நட்சத்திரத்தில் பைரவர் அவதரித்தார். எனவே அந்த நட்சத்திரக்காரர்கள் இவரை வணங்கினால் நல்லது. பைரவருக்கு நள்ளிரவு பூஜையே உகந்தது எனப்படுகிறது. எனினும் உச்சி காலம் எனப்படும் நன்பகல் பூஜை சிறப்பானது.

அஷ்டமி நாளில் உச்சி வேளையில் பைரவருக்கு சிவப்பு ஆடை அணிவித்து, நெய் விளக்கு ஏற்றி, மாலை சூட்டி, சிவப்பு நிற மலர்களால் அர்ச்சித்து, வழிபட்டால் சகல தோஷங்களும் நீங்கி நல்ல வாழ்வு கிட்டும்.

எலுமிச்சம்பழத்தை பைரவமூர்த்தியின் காலில் வைத்து அர்ச்சித்து வீட்டுக்கு கொண்டு போனால் தீராத வியாதிகள் தீரும். வீட்டை சூழ்ந்திருக்கும் பீடைகள் ஒழியும். கெட்ட அதிர்வுகள் விலகும் என்று சொல்லப்படுகிறது.

மன அமைதியே இல்லாதவர்களுக்கு பைரவரே நல்ல துணை. செல்வவளம் பெருக சொர்ணாகர்ஷன பைரவரை வணங்கலாம். எட்டு தேய்பிறை அஷ்டமி நாட்களில் பைரவ வழிபாடு செய்தால் எந்தத் துன்பமானாலும் விலகி வாழ்க்கையில் சுபிட்சம் உண்டாகும் என்பது ஆன்றோர்கள் வாக்கு.

தேய்பிறை அஷ்டமி நாள் அன்று. துக்கங்கள் யாவும் மாற்றி நிம்மதியை அருளும் பைரவ வழிபாட்டை மேற்கொள்ளலாம்?

ஓம் நமசிவாய... ஓம் நமசிவாய....
ஓம் ஹ்ரீம் மஹாபைரவாய நமஹ...
ஸ்ரீ காலபைரவர் திருவடிகளே போற்றி....

~ விஜயராகவன் முகநூல் பதிவு



# அருமையான தெரிந்த கோவில் தெரியாத தகவல்.

## திருவெள்ளறை....

திருச்சியிலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் திருச்சி - துறையூர் சாலையில் இருக்கிறது இந்த திருவெள்ளறை எனும் சிற்றூர் அங்கே வெண் பாறைகளால் ஆன குன்றின் மேல் ஒரு கோட்டை போலவே அமைக்கப்பட்டுள்ளது இக்கோவில். திருவரங்கம் கோவில் 108 திவ்ய தேசங்களில் முதன்மையாகச் சொல்லப்பட்டாலும், இந்த திருவெள்ளறை திருவரங்கத்தினை விட பழமையான கோவில் என கருதப்படுகிறது.

## மூலவர்

புண்டரீகாட்சன் - செந்தாமரைக் கண்ணன், நின்ற கோலத்தில் காட்சி அளிக்கின்றார்.



தாயார் - செண்பகவல்லி தாயார் எனும் பங்கஜச் செல்விக்கு தனி சன்னதி உண்டு. தாயாரின் உற்சவமூர்த்திக்கு பங்கஜவல்லி என்ற திருநாமம்

## பெயர்-காரணம்:

இந்த திருத்தலம் ஸ்ரீரங்கம் பெருமாள் கோவிலை விட மிகவும் பழமையானது. அதனால் ஆதிவெள்ளறை என்றும் அழைக்கப்படுகிறது.

## தீர்த்தம்:

திருக்கோவிலில் திவ்யகந்த, க்ஷீரபுஷ்கரிணிகள், மணிகர்ணிகா என்று 7 தீர்த்தங்கள் கோவிலுக்குள்ளேயே அமைந்துள்ளது.

## விமானம்:

விமலாக்ருதி விமானம்.- கோவில் கோபுரம் பாதி சிதைந்து பாதிமட்டுமே எஞ்சி இருக்கின்றது.

## கோவிலின் - சிறப்பம்சம்:

எந்த கோவிலிலும் இல்லாத வகையில் இங்கு உத்தராயண வாசல் (வடக்கு வாசல்), தட்சிணாய வாசல் (தெற்கு வாசல்) என இரு வாசல்கள் உண்டு.
தை முதல் ஆனி வரை உத்தராயண வாசல் வழியாகவும், ஆடி முதல் மார்கழி வரை தட்சினாய வாசல்

வழியாக பெருமாளை தரிசிக்க பக்தர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

சிபிச்சக்கரவர்த்திக்கு பெருமாள் ச்வேத வராகனாக (வெள்ளைப் பன்றி) காட்சி அளித்ததாக தல புராணம் கூறுகிறது. இதனால் ஸ்வேதபுரி நட்சத்திரம் எனவும் பெயர் வந்தது.

ஸ்ரீதேவி, பூதேவி, சூர்ய, சந்திரர்கள், ஆதிசேசன் முதலியோர் மனித வடிவில் வந்து பெருமாளுக்கு கைங்கர்யம் செய்ததாக் கூறப்படுகிறது.

இங்கு ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி என மூன்று நாச்சியார்களுக்கு மூன்று திவ்ய தேசங்கள் பெருமை.



தல-வரலாறு:

திருப்பாற்கடலில் மகாவிஷ்ணுவும், மகாலட்சுமியும் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது பெருமாள், லட்சுமி உனது கருணையால் இந்த உலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளும் மிகவும் சந்தோஷமாக உள்ளது. இதனால் எனக்கு பரம திருப்தி ஏற்படுகிறது. எனவே உனக்கு வேண்டிய வரத்தை என்னிடமிருந்து கேட்டு பெறலாம் என்றார். அதற்கு லட்சுமி, தங்களின் திருமார்பில் நித்ய வாசம் செய்யும் எனக்கு வேறு வரம் எதற்கு  என்றாள். இருந்தாலும், எனது பிறந்த இடமான இந்த பாற்கடல்.

இங்கு தேவர்களை காட்டிலும் எனக்கு தான் அதிக உரிமை வேண்டும் என்கிறாள். அதற்கு பெருமாள், உனது கோரிக்கையை இங்கு நிறைவேற்ற முடியாது. இங்கு நான் தான் அனைத்துமாக இருக்கிறேன். இருந்தாலும் பூமியில் சிபி சக்கரவர்த்திக்கு நான் தரிசனம் தரும்போது உனது விருப்பத்தை நிறைவேற்றி வைக்கிறேன் என்றார். இந்நிலையில் இந்தியாவின் தென்பகுதியில் ராட்சஷர்கள் மிகுந்த தொல்லை கொடுத்து வந்தார்கள். அவர்களை அடக்க சிபி சக்கரவர்த்தி தன் படைகளுடன் சென்றபோது, ஒரு வெள்ளை பன்றி அவர்கள் முன் தோன்றி இவர்களுக்கு பெரும் தொந்தரவு கொடுத்தது.

படைவீரர்களால் அந்த பன்றியை பிடிக்க முடியாமல் போக, சக்ரவர்த்தியே அதை பிடிக்க சென்றார். பன்றியும் இவரிடம் பிடிபடாமல் இங்கு மலைமீதுள்ள புற்றில் மறைந்து கொண்டது. அரசனும் இதை பிடிக்க மலையை சுற்றி வரும்போது, ஒரு குகையில் மார்க்கண்டேய முனிவர் கடுமையாக தவம் செய்து கொண்டிருப்பதை கண்டு அவரிடம் விஷயத்தை கூறினான். அதற்கு முனிவர், நீ மிகவும் கொடுத்து வைத்தவன்.

நாராயணனின் தரிசனத்திற்கு தான் நான் தவம் செய்து கொண்டிருக்கிறேன். ஆனால் அவர் உனக்கு வராக (பன்றி) உருவத்தில் காட்சி கொடுத்திருக்கிறார். நீ இந்த புற்றில் பாலால் அபிஷேகம் செய் என்றார்.

அரசனும் அப்படியே செய்ய நாராயணன் தோன்றி அனைவருக்கும் காட்சிகொடுக்கிறார். இந்த தரிசனத்திற்கு வந்த மகாலட்சுமியிடம், நீ விரும்பியபடி இத்தலத்தில் உனக்கு சகல அதிகாரத்தையும் தந்து விட்டு, அர்சாரூபமாக இருந்து கொண்டு நான் அனைவருக்கும் அருள்பாலிக்கிறேன் என்றார் பெருமாள். இதன் பின் அரசன் அனைவரிடமும் விடைபெற்று ராவண ராட்சஷர்களை அழிக்க சென்றான். ஆனால் மார்க்கண்டேயர், இவர்களை அழிக்க பெருமாள் ராம அவதாரம் எடுக்க உள்ளார். எனவே நீ திரும்ப நாட்டை ஆள செல் என்றார். ஆனால் மன்னனுக்கு மனம் திருப்தி அடையவில்லை. அதற்கு மார்க்கண்டேயர், உனக்கு தரிசனம் கொடுத்த பெருமாளுக்கு நீ கோவில் கட்டி திருப்தி பெறுக என்றார்.

அரசனும் கோவில் கட்டி, சேவை செய்வதற்காக 3700 குடும்பங்களை அழைத்து வந்தான். வரும் வழியில் ஒருவர் இறந்து விட்டார். அதற்கு பெருமாள், அரசனிடம் நீ கவலைப்பட வேண்டாம். நானே இறந்தவருக்கு பதிலாக 3700 பேரில் ஒருவராக இருந்து, நீ நினைத்த மூவாயிரத்து எழுநூறு குடும்பக்கணக்கு குறைவு படாமல் பார்த்து கொள்கிறேன் என்றார். பெருமாள் அளித்த வரத்தின் படி தாயார்செங்கமலவல்லி மூலஸ்தானத்திலேயே இருந்து கொண்டு, திருவிழா காலங்களில் பெருமாளுக்கு முன்பாக பல்லக்கில் எழுந்தருளுகிறார்.

கோவில் சுமார் 50 அடி உயரத்தில் வெண்மையான பாறையால் ஆன ஒரு குன்றின் மீது அமைந்துள்ளதால் இத்தலம் வெள்ளறை என்ற பெயர் பெற்று தற்போது திருவெள்ளறை ஆனது. முன் கோபுரம் பூர்த்தியாகாத நிலையில் உள்ளது. புண்டரீகன் என்ற யோகி திருவெள்ளறையில் ஒரு நந்தவனம் அமைத்து அதில் வளர்ந்த துளசியால் பெருமாளையும், தாயாரையும் பூஜித்து வந்தார். இதில் மகிழ்ந்த பெருமாள் இவருக்கு தரிசனம் கொடுத்தார். இதனாலேயே இங்குள்ள பெருமாள்புண்டரீகாட்சப்பெருமாள் ஆனதாக வரலாறு கூறுகிறது.

கோவில் கோட்டை போல் அமைக்கப்பட்டுள்ளது. பெரிய பிரகாரத்தில் தென்பகுதியில் கல் அறைகள்உள்ளது.

இங்கிருந்து ஒலி எழுப்பினால் எதிரொலி தெளிவாக கேட்கும். பெருமாளின் மங்களாசாசனம் பெற்ற 108 திவ்ய தேசங்களில் இது 4வது திவ்ய தேசம். குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் கார்த்திகை ஞாயிற்றுக்கிழமைகளில் இங்குள்ள தீர்த்தத்தில் நீராடி,பெருமாளுக்கு படைத்த பொங்கலை சாப்பிட்டால் புத்ரபாக்கியம் நிச்சயம் என்பது ஐதீகம்.

~ முகநூல் பதிவு

# நோயிலிருந்து விடுபட்டு மரணத்தையும் வெல்லச் செய்யும்
# மகா மிருத்யுஞ்சய யந்திரம்

மகா மிருத்யுஞ்சய யந்திரம் சிவபெருமானுடன் தொடர்புடையது. இந்த எந்திரத்தை தொடர்ந்து பூஜித்து வந்தால் மரண பயம் நீங்கும். இந்த எந்திரத்தால் எந்தவித நோய்களையும் குணப்படுத்துவதற்கும், இந்த எந்திரத்தை வைத்து தீப தூப ஆராதனை செய்து புஷ்பம் வைத்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள மந்திரத்தை தினமும் 108 முறை கூறி பூஜிப்பவரை மரணத்திலிருந்து காப்பாற்றுவதற்கும் உதவுகிறது. இந்த யந்திரத்தை வணங்குவதன் மூலம் துஷ்ட சக்திகளிடம்மிருந்தும், தீயவர்களின் தூர் பார்வைகளிலிருந்தும் காக்கும் அரணாக மகா மிருத்யுஞ்சய யந்திரம் விளங்குகிறது. மேலும் எல்லாவிதமான எதிர்மறை சக்திகளிடமிருந்தும் நம்மை ரட்சித்து மங்களகரமான பலன்களை வணங்குபவரை அனுபவிக்க செய்கிறது.

**மகா மிருத்யுஞ்சய மந்திரம்:**

ஓம் த்ரியம்பகம் யஜாமஹே சுகந்திம் புஷ்டிவர்த்தனம்
உருவாருஹமிவ பந்தனாத் ம்ருத்யோர் முச்சீய மாம்ருதாத்




~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

# சகல பாக்கியங்கள் தரும்
# ஸ்ரீ வாராஹி அம்மன்

வாராஹி உதித்த நட்சத்திரம்: ஆயில்யம்
வாராஹி உதித்த திதி : பஞ்சமி (வளர்பிறை)
வாராஹி உதித்த மாதம் : ஆடி
வாராஹிக்கு உகந்த நிறம் : நீலம், கருப்பு, பவள நிறம் ஆனால் நீல நிற வஸ்திரமே முதன்மையானது.



வாராஹிக்கு உகந்த மலர், நீல சங்கு பூ, கருந்துளசி, வில்வம்
வாராஹிக்கு வலிமை கூடும் நாள் : பௌர்ணமி, தேய்பிறை/வளர்பிறை, பஞ்சமி, அஷ்டமி தசமி திதி சிறப்பு.
வாராஹி நம்முடன் பேசும் நேரம் இரவு 8மணிக்குமேல்
பிடித்த அமுது: சக்கரைவள்ளிக்கிழங்கு, எருமை தயிர், பயிர் வகைகள், மாதுளை, அண்ணாசி, செங்கரும்பு, ஆமை வடை.

உங்கள் லட்சிய வெற்றியை உங்கள் கரத்தில் கொடுத்து நீங்கள் மகிழும் முகத்தை பார்த்து தன்னை வேண்டி வந்தவன் மகிழ்வொடு இருக்கிறான் என ஆனந்த நடனமிட்டு கொஞ்சி மகிழ்ந்து விளையாடுவாள் அன்னை வாராஹி நமக்கு தெரிந்ததெல்லாம் அவள் உக்ரமானவள், ஆவேசமிகுந்தவள் என்றுதான், அப்படி அல்ல தன்னை மறவாமல் சிந்திக்கும் பக்தனோடு கொஞ்சி விளையாடும் குழந்தை.

அன்னையின் பரிபூரண அருள் கிடைக்க செய்யவேண்டியவை;
1. வாராஹியை வழிபட நினைப்பவர்கள் எக்காரணம் கொண்டும் மற்றவர்களை தூற்றவோ சபிக்கவோ கூடாது, அது உங்கள் வலிமையை குறைக்கும்.

2. வாராஹி அன்னை அமர ஒரு தூய்மையான இடம் தேவை இடம் என்றால் மாடமாளிகையோ, அலங்கார தோரணையோ அல்ல, அவள் தூய்மையாக இருக்க வேண்டும் என எண்ணுவது தன் பக்தனின் தூய்மையான மனதை மட்டும் தான்.

3. வாராஹி அருள் நமக்கு இருக்கிறது என்ற கர்வமும் அதனால் பெருமித பேச்சும் இருக்கவே கூடாது.

4. எனக்கு இது வேண்டும் தாயே கொடு என கேட்கலாம். ஆனால் வேறொருவரை கெடு என்று இந்த தேவியிடம். வேண்டக் கூடாது. ஏனெனில் கண்ணிமை போல் காக்கும் அன்னைக்கு நம் சத்ருபுத்தி

தெரியாமலா போய்விடும். நமக்கு தீங்கு செய்பவர்களை அன்னை பார்த்து கொள்வாள்.

5. வாராஹி நமக்கு முன்கூட்டியே நிகழ்வுகளை எண்ணவடிவாக சொல்லி எச்சரிப்பாள். அதை உள்வாங்கும் மனத்தூய்மை நமக்கு என்றும் வேண்டும்.

6. மற்றவர்களுக்காக உங்கள் பிரார்த்தனை அன்னையிடம் அமைந்தால் இது மிகப்பெரிய வலிமை, உடனடியாக அன்னை மனதில் குடிகொண்டு நம் ஆசையை நிறைவேற்றுபவள்.

7. வாராஹி அன்னை அருளை பெற முக்கிய விதி புறம் பேச கூடாது. மற்றவர் படும் துயரம் கண்டு நாம் அதில் குளிர்காயக்கூடாது. இந்த எதிர்மறை எண்ணம் இருந்தால் அன்னை அருள் நமக்கு கிடைக்காது ஆயிரம் மந்திரங்கள் லட்ச எந்திரமும் வைத்திருந்தாலும் அன்னை பார்வை நம்மீது படாது.

8. மனத்தில் பொய், வஞ்சம், இதெல்லாம் இருக்காமல் இருப்பது நல்லது. ஏனெனில் வாராஹி அதில் உடனே அமர்ந்து அருள் புரிவாள்.

9. நெறி எனும் முக்கிய விதியை யார் கடைப்பிடிக்கின்றார்களோ அவர்களிடத்தில் பிரியம் கொண்டு அன்போடு அருளாட்சி செய்பவள் தான் இந்த வாராஹி அன்னை.

வாராஹியின் சிறப்புமிக்க ஸ்தலங்களைப் பற்றி நாம் அடுத்த இதழில் பார்ப்போம் காத்திருங்கள்..
ஜெய் வாராஹி

~ திருமதி. அன்னபிரிய லட்சுமி



**உங்கள் இல்லத்தில் வைதீக/ஆகம முறைப்படி யாகங்கள் மற்றும் சத்ய நாராயண பூஜை போன்ற அனைத்து பூஜைகளும் செய்து தர அணுகவும்**

**www.priestservices.com**

**போன்: 95660 00134**

## மந்திர மகிமை

# அரசியலில் புகழ்பெற

சௌந்தர்ய லஹரி பாடல்கள் அனைத்துமே மந்திரங்கள், அவை ஏதோ ஒன்றுக்கான மந்திரங்கள் என்றில்லாமல் மனித குலத்திற்குத் தேவையான அனைத்து தரவுகளும் அடங்கியுள்ளன. அந்த வகையில் இந்த இதழில் அரசியலில் புகழ் பெறுவதற்கான மந்திரப் பாடலை பார்ப்போம்.

### மந்திரம்

புஜாச்லேஷாந்-நித்யம் புர-தமயிது: கண்டகவதீ
தவ க்ரீவா தத்தே முககமலநால-ச்ரிய-மியம்
ஸ்வத: ச்வேதா காலாகரு-பஹுல-ஜம்பால-மலினா
ம்ருணலீ-லாலித்யம் வஹதி யததோ ஹாரலதிகா



### மந்திரத்தின் பொருள்

தாயே முப்புரங்களை சிரிப்பால் எரித்த சிவனாரின் கரங்கள் உன் கழுத்தில் பட்டதால் அப்பகுதி மயிர்க்கூச்சத்தால் முட்கள் போல் இருப்பதால் உன் முகத்தாமரையைத் தாங்கி நிற்கும் தண்டினைப் போல காட்சியளிக்கிறதே! அதன் கீழுள்ள முத்துமாலையானது வெண்ணிறம் கொண்டதாய் இருப்பினும் கருப்பு நிறமான அகிலுடன் சேர்ந்த சந்தனம் போல அழுக்கடைந்தது போல் இருப்பதைப் பார்த்தால், சேற்றில் உள்ள தாமரைக் கோடி போல் அல்லவா தோன்றுகிறது.

### மந்திரத்தை பிரயோகிக்கும் முறை

வெள்ளித் தகட்டில் குங்குமத்தைப் பரப்பி, அதில் இந்த மந்திரத்திற்கான யந்திரத்தை வரைந்து அதனை வைத்தே பூஜை செய்ய வேண்டும். தினமும் கிழக்குப் பக்கமாக அமர்ந்து 1000முறை வீதம் 45நாட்கள் ஜபிக்க வேண்டும்.

மணமுள்ள மலர்களால் லலிதா சகஸ்ரநாம அர்ச்சனை செய்வது சிறப்பு, கர்ப்பூர வீடிகா என்னும் நறுமணமிக்க தாம்பூலத்தை நைவேத்யம் செய்ய வேண்டும்.

முறைப்படி இந்த மந்திரத்தை பிரயோகம் செய்யும் எவருக்கும் குறிப்பிட்ட 45நாட்களில் ராஜவசியம் பலிதமாகி, அரசியலில் புகழ்பெற்று நல்லதொரு செல்வாக்கையும் செல்வத்தையும் அடையலாம்.

~ ரா. பன்னீர்செல்வம்

# தை அமாவாசை



அமாவாசை திதி ஒவ்வொரு மாதமும் வந்தாலும் உத்தராயன காலத்தின் முதல் மாதமான தை மாதத்தில் வரும் அமாவாசையும் தட்சணாயின காலத்தின் முதல் மாதமான ஆடி மாதத்தில் வருகிற அமாவாசையும் புரட்டாசி மாதத்தில் வரும் மஹாளய அமாவாசையும் முன்னோர்கள் வழிபாட்டுக்கு உகந்தவையாகும், ஆறு, குளம், கடல் போன்ற நீர்நிலைகளில் இவ்வழிபாடு மேற்கொள்ளப்படுகிறது, அன்றைய தினங்களில் தங்கள் முன்னோர்களுக்கு செய்யப்படும் தர்ப்பணம் எனப்படும் நீத்தார் கடன் வழிபாடு நமது குடும்பத்தில் சுபிட்சம், மகிழ்ச்சி, குழந்தைப் பேறு, முதலியன நல்கி நமது பாவங்களை நீங்குகிறது.

# தை வெள்ளி



உத்தராயண காலத்தின் தை மாதத்தில் வருகின்ற அனைத்து வெள்ளிக்கிழமைகளும் அம்மன் வழிபாட்டுக்கு உகந்தவை, இந்த தை வெள்ளி தினங்களில் அபிராமி அந்தாதி, சௌந்தர்ய லஹரி உள்ளிட்ட அம்மன் அருள்பாடும் பாடல்களை பாராயணம் செய்வதால் குடும்பத்திலும் மனதிலும் மகிழ்ச்சியும் அமைதியும் தாண்டவம் ஆடும்.

# வசந்த பஞ்சமி



கல்விக் கடவுளான சரஸ்வதி தேவி அவதரித்த தினமே வசந்த பஞ்சமி ஆகும். இதனை மகாபஞ்சமி என்றும் சொல்வார்கள், இன்றைய தினத்தில் பஜனைகள் மற்றும் நாம சங்கீர்த்தனம் ஆகியவற்றால் அம்பிகையை ஆராதிப்பது சிறந்த நற்பலன்களைத்தரும். இன்று சரஸ்வதி தேவியை ஆராதனை செய்து வழிபட்டால் ஞானசித்தி உண்டாகும். கல்வி பயிலத் தொடங்கவும் ஏற்ற நாள் இந்த வசந்த பஞ்சமி கிருஷ்ண பகவான், சாந்தீபனி முனிவரிடம் குருகுல வாசம் தொடங்கிய நன்னாளும் இதுவே.

~ ரா. பன்னீர்செல்வம்

# குருலிங்க சுவாமிகள்

சித்தர்கள் என்றாலே காடு, மலை, குகை இவைதான் இருப்பிடம் என்று எண்ணியிருந்த காலத்திலேயே தமிழகத்தின் தலைநகரம் சென்னையிலும் சென்னையைச் சுற்றியுள்ள பல இடங்களிலும் சித்தர்கள் அருளொளியை அள்ளி வீசிய வரலாறுகள் நிறைய உண்டு. அந்த வகையில் நமது சென்னையில் வாழ்ந்து எளிய மக்களின் வாழ்க்கையில் இருள் அகற்றிய ஒரு மகானின் ஜீவசமாதியைப் பற்றி இந்த இதழில் தெரிந்துகொள்வோம்.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என உருகிய ஜீவகாருண்ய சீலர் வள்ளலார் வாழ்ந்தது இந்த சென்னையில் தான். அவர், தருமமிகு சென்னை என தனது வாயாரப் புகழ்ந்ததால் தான் சென்னை, ஒரு காலத்தில் மகா மேதைகளும் ஞானிகளும் உலவிய மண்ணாக விளங்கியது.



ஆம் அன்றைய சென்னையின் நுழைவாயிலாக விளங்கிய சைதாப்பேட்டையில் இன்றளவும் உயிர்ப்போடு விளங்குகிறது ஒரு மகானின் ஜீவசமாதி, சித்தர்கள் வாழ்ந்து ஐக்கியமான ஜீவசமாதிகளைத்தேடி பல இடங்களுக்கும் பயணம் செய்வோர், இந்த ஜீவசமாதியை அறிந்திருப்பார்களா என்பது விளங்கவில்லை.

பாமர மக்களின் காவலனாய் எளியோர்க்கு இரங்குகின்ற வள்ளலாய் அருள்புரிந்த அந்த மகான் குருலிங்க சுவாமிகள். இவருடைய ஜீவசமாதி சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள புகழ்பெற்ற காரணீஸ்வரர் ஆலயத்தின் எதிரில் உள்ள சாலையில் மிகமிக எளிமையாய் அமைந்துள்ளது.

ஒரு சாதாரண, சிறிய கோவிலைப் போன்ற அமைப்பில் கருவறை விமானம் தலை நிமிர்ந்து நிற்க, இந்த ஜீவசமாதி கோவில் காட்சியளிக்கிறது,
யார் இந்த குருலிங்க சுவாமி,
இவரது பூர்வீகம் எது?
இவர் நிகழ்த்திய அற்புதங்கள் என்ன?
என்பதனை பார்ப்போம்.

இவரது சொந்த ஊர் விருதாசலம் என்று அழைக்கப்படுகின்ற திருமுது குன்றம் என்று அறியப்படுகின்ற விருதாசலம் சிறுவயதாய் இருக்கும் போதே இறைவன் ஈசன்பால் மாறாத பற்றும் பக்தியும் கொண்ட

இவர், ஈசன் அருள்புரியும் திருத்தலங்களை நாடி யாத்திரை செல்லத் தொடங்கினார். ஆலய கோபுரங்களும் அடர்ந்த வனங்களும் உயர்ந்த மலைகளும் இறைவன் ஈசனாகவே இவரது கண்களுக்குப் பட்டது, நமசிவாய எனும் ஐந்தெழுத்து மந்திரமே இவருக்கு சுவாசமாய் இருந்தது என்னுமளவிற்கு சிந்தையில் சிவனை நிறைத்தார்.

அந்த சமயத்தில் தான் இவர் காசிக்கு சென்று பலகாலம் தங்கியிருந்து ஈசனின் திருவருள் பெற்றார். அப்போது பக்தர்களுக்கும் பாமர மக்களுக்கும் இவர் திரிலிங்க சுவாமிகளாக காட்சி தந்தார். இவரை எல்லோருமே திரிலிங்க சுவாமிகள் என்றே அழைத்து போற்றிப் புகழ்ந்தனர்.

குருலிங்க சுவாமிகள் தன் பெயருக்கேற்ப தனது கையில் எப்போதும் சிவலிங்கம் ஒன்றை வைத்திருப்பாராம். இப்போதும் இவரது சிலையில் கையில் சிவலிங்கம் இருப்பது போலவே வடிவமைத் திருக்கிறார்கள்.

பல சிவாலயங்களுக்கும் சென்று இறைபணி ஆற்றிய குருலிங்க சுவாமிகள், சைதாப்பேட்டையில் உள்ள காரணீஸ்வரர் ஆலயத்திற்கு வந்து தன்னாலான இறைத்தொண்டினை பலகாலம் செய்து வந்துள்ளார்.

தன்னுடைய இறுதிக்காலம் நெருங்குவதை உணர்ந்த சுவாமிகள், தான் தொண்டு செய்த காரணீஸ்வரர் ஆலயத்தின் உள்ளே ஒரு இடத்தில் ஜீவசமாதியடைய எண்ணி, தன் விருப்பத்தை ஆலய நிர்வாகிகளிடம் தெரிவிக்க, ஆலய தர்மகர்த்தா இறைவன் உறையும் ஆலயத்தில் சமாதிக்கு இடமில்லை என மறுத்துவிட, அதே நேரத்தில் அவரது மகன் நோய்வாய்ப்பட்டு மோசமான நிலையை அடைய, குருலிங்க சுவாமியை அணுகி, அவர் மன்னிப்பு கேட்டவுடன் மகன் குணம் அடைந்ததாக கூறுகின்றனர்.

காரணீஸ்வரர் ஆலயத்திற்கு அன்றாடம் வந்து வணங்கும் ஒரு பக்தர், குருலிங்க சுவாமிகளின் மகிமையை உணர்ந்தவர். அவர், மகானின் விருப்பத்தை பூர்த்தி செய்யும் விதமாக, ஆலயத்திற்கு எதிரில் உள்ள தன் இடத்தைக் கொடுத்து, சுவாமிகள் ஜீவசமாதி அடைய உதவியுள்ளார், அப்படி அந்த பக்தர் கொடுத்த இடத்தில் தான் தற்போது ஜீவசமாதி அமைந்துள்ளது.

இந்த ஜீவசமாதியின் கருவறைக்கு வெளியே ஒரு மூதாட்டியின் புகைப்படம் இடம் பெற்றுள்ளது. யார் இவர்? என்ற கேள்விக்கு, இவரது பெயர் சகுந்தலா அம்மாள் என்றும் குருலிங்க சுவாமிகள் வாழ்ந்த போது, அந்த மகானின் ஆற்றலை உணர்ந்து அவருக்குப் பணிவிடைகள் செய்து வந்ததாகவும் அவர், இறைவனோடு ஐக்கியமான பிறகும் இந்த ஜீவசமாதியில் தொண்டாற்றி, தன் உயர்ந்த இறை பக்தியால் சிவலிங்கத்தில் ஐக்கயமானவர் என்றும் விபரம் சொன்னார்கள். இன்றும் இங்கே சூட்சுமமாய் உலவும் சகுந்தலா அம்மாள், குருலிங்க சுவாமிகளின் பக்தர்களுக்கு தானும் அருள்புரிகிறார் என்பதும் கண் கூடான உண்மை.

வாழ்ந்த காலத்திலும் சரி, ஜீவசமாதி அடைந்த பின்னரும் சரி, இங்கு வந்து, சுவாமிகளை வேண்டி

நிற்போரின் சங்கடங்கள் அனைத்தும் ஒளிபட்ட இருள்போல உடனே விலகுவதாக அனைவருமே உணர்ந்துள்ளனர்.

இன்றும் ஏராளமான பக்தர்கள் ...குறிப்பாக பெண்கள் தங்கள் குறைகளைக் களையும்படி இங்கே வந்து வேண்டுவதும் அவை உடனே தீர்வு தருவதும் நித்தம் நித்தம் இங்கே நடந்து வரும் அற்புதம் ஆகும். ஒரு பெண்மணி, தன் மகனின் எதிர்காலம் குறித்த தன் கவலையை சுவாமிகளின் சன்னதியில் சொல்லி வேண்ட, சுமார் நான்கு நாட்களிலேயே அவர் வெளிநாடு செல்லும் யோகம் பெற்று இன்று நல்ல நிலையில் இருக்கிறாராம்.

ஒரு பேராசிரியர், சென்னைக்குப் புதியவர், அவர் ஒரு இடத்துல அமர்ந்து தியானம் செய்திருக்கிறார், அவருக்கு அசரீரியாய் ஒரு குரல் கேட்டுள்ளது. நான் இங்கதான் இருக்கேன், அப்படின்னு! இப்படி குறை என்று வேண்டும் அடியவர்களுக்கு குறை தீர்க்கும் கோமகனாய் ஓடிவந்து உதவிகள் செய்து, அவர்களுக்கு நல்வாழ்வு தருவதில் குருலிங்க சுவாமிகளை மிஞ்சுபவர் யாரும் இல்லை என்று உணர்ந்தவர்கள்  சொல்கிறார்கள்.

ஒருவர் தன் மகனுக்கு கேன்சர் நோய் முற்றிய நிலையில் காப்பாற்ற இயலாத தருணத்தில் இந்த ஜீவசமாதியில் வந்து வேண்டிக்கொள்ள, ஓர் அதிசயம் நிகழ்ந்துள்ளது. அதாவது, எந்தவித மருந்தும் மாத்திரையும் இல்லாமலேயே அந்தக் கொடிய நோய் குணமான விந்தையை இன்றளவும் எண்ணி எண்ணி  மகிழ்கின்றனர்.

இப்படி ஏழை, எளிய மக்களின் பாதுகாவலாய் இன்றும் இருப்பவர் தான் குருலிங்க சுவாமிகள்.

கருவறையில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். அதன் பின்புறம் குருலிங்க சுவாமிகளின் திருவுருவச்சிலை அமைக்கப்பட்டுள்ளது. வெளியுலகம் அறியாவிட்டாலும் இந்தப் பகுதி மக்களின் குறைகள் தீரும் அதிசயம் கண்டு, இங்கு வருகின்ற பக்தர்களின் எண்ணிக்கைப் பெருகி வருகிறது.

குருலிங்க சுவாமியை மனதார வணங்கி, குறைகளைச் சொல்ல, அனைத்தும் தீரும், நல்வாழ்வு மலரும், மகானின் அருளாசி அனைவருக்கும் கிட்டும், இது உறுதி.

~ ரா. பன்னீர்செல்வம்


Special Birthday Ritual Packages for You


Get 40% OFF

Call: 95660 00134

# உள்ளங்கையில் காணப்படும் ராசிகள், மாதங்கள் மற்றும் பலன்கள்

எல்லோருக்கும் ஒவ்வொரு விரல்களும் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொறு பிரிவையும் அங்குலாஸ்தி (Phalanges) என்று அழைக்கப் படுகிறது. கட்டை விரல் தவிர பிற நான்கு விரல்களில் உள்ள அங்குலாஸ்திகள் படத்தில் உள்ளவாறு பன்னிரெண்டு ராசிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

| குறி | ராசி | மாதம் |
|---|---|---|
| மே | மேஷம் | சித்திரை |
| ரி | ரிஷபம் | வைகாசி |
| மி | மிதுனம் | ஆனி |
| க | கடகம் | ஆடி |
| சி | சிம்மம் | ஆவணி |
| கன் | கன்னி | புரட்டாசி |
| து | துலாம் | ஐப்பசி |
| வி | விருச்சிகம் | கார்த்திகை |
| த | தனுசு | மார்கழி |
| ம | மகரம் | தை |
| கு | கும்பம் | மாசி |
| மீ | மீனம் | பங்குனி |




ராசிக்குறிய மாதம் பட்டியலிடப்பட்டுள்ளது.

இந்த 12 மாதங்களை குறிக்கும் அங்குலாஸ்திகளில் ஏதாவது ஒரு விரலில் உள்ள அங்குலாஸ்தியில் மச்சம், மரு மற்றும் குறுக்கு கோடுகளும் வெட்டுக்குறிகளும் காணப்பட்டால் அந்த விரல் அடிமைத்தொழிலை குறிக்கும் சனியின் விரலான நடு விரலாக இருந்தால் மச்சம் இருக்கும் மாதத்தை சுட்டிக்காட்டும் மாதத்தில் வேலைப்பளு அதிகமாக இருக்கும். இதுவே குருவின் விரலான ஆள்காட்டி விரலில் இருந்தால் தன நிலையில் தட்டுப்பாடும் கடன் வாங்கும் நிலையும் ஏற்படும். இதுவே சூரிய விரலான மோதிர விரலில் இருந்தால் அரசாங்க அதிகாரிகள் மூலமாக பிரச்சனையும், பதவியில் பிரச்சனையும் ஏற்படும். இதுவே மச்சம் இருக்கும் அங்குலாஸ்தி புதனின் விரலான சுண்டு விரலில் அமைந்து உள்ளது என்றால் தகவல் தொடர்பில் கவமுடன் இருக்க வேண்டும். தங்களது கணினி அல்லது கைபேசியில் பழுது ஏற்பட்டு சரி செய்ய நேரிடும். புதிய தகவல் தொடர்பு சாதனங்கள் வாங்க நேரிடலாம்.

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்


# ஜோதிடக்கதை

# கெட்டவன் கெட்டிடில்

தேவன்பட்டி கிராமமே திகிலுடன் எதிர்பார்த்திருந்த அந்த நாள் வந்தது, மக்களுடைய மனதில் என்ன நடக்குமோ என்ற அச்சமும் இப்படி நடந்துவிடாமல் தடுக்க முடியவில்லையே என்ற ஆதங்கமும் இருந்தது.

இதுவரை நடந்தது இதுதான்
தேவநாதன், நடுத்தர வயதைத் தாண்டிய நியாயவான், நேர்மைக்குப் பெயர் போன அவரை ஊர்மக்கள் அனைவரும் உயர்ந்த இடத்தில் வைத்து மதித்தனர்.

அந்த ஊரில் நெடுங்காலமாக பராமரிப்பின்றி பாழடைந்துகிடந்த அம்மன் கோயிலைக் கண்டு வருந்திய தேவநாதன், நல் உள்ளம் படைத்த அன்பர்களை அணிதிரட்டி, அடர்ந்து கிடந்த புதர்களை வெட்டி அப்புறப்படுத்தி, செல்வந்தர்கள் பலரை நாடி நன்கொடைகள் வாங்கி, அந்த அம்மன் ஆலயத்தை புனரமைத்து இன்று மூன்றுகால பூஜைகள் நடக்கவும் தொடர்ந்து ஆலய விளக்குகள் எரியவும் வழிவகை செய்தார்.



இருண்டு கிடந்த ஆலயம் ஒளிமயமாய் விளங்க ஆரம்பித்த நாள் முதல் ஊரே நல்ல நிலையடைந்தது நல்ல மழை பெய்து நீர்நிலைகள் நிரம்பியது விவசாயம் தழைத்தது மக்கள் அமைதியும் நிம்மதியும் பெற்று வாழ்ந்தனர்.

அம்மனின் அருள் பரிபூரணமாய் எல்லோருக்கும் கிடைத்தது. இந்த கிராமமே நல்ல நிலையை அடைய முயற்சிகள் மேற்கொண்டு செயலாற்றிய தேவநாதன் அவர்களையே அறங்காவலராய் பொறுப்பேற்கச் செய்த மக்கள் அவரையே தங்கள் வழிகாட்டியாய் எண்ணி முதல் மரியாதை செய்து மகிழ்ந்தனர்.

இன்று, கோவிலின் கும்பாபிஷேக விழா, ஒருவர் மட்டும் எதிர்த்தார், அவர், பொய்யாமொழி! பெயர் தான் பொய்யா மொழியே தவிர, அவர் சொல்லில் பொய் நிறைந்திருக்கும், மிகப்பெரும் செல்வந்தர் என்ற செருக்கும் இருந்தது. அவரிடம் இருந்த செல்வம் அனைத்துமே தவறான வழியில் சேர்ந்தவை என்பதால், அந்த நல்லவரால் (?) தேவநாதனின் புகழை தாங்க முடியவில்லை.

கோயில் அமைந்துள்ள இடம் தங்கள் மூதாதையர் சொத்து என ஒரு போலிப் பத்திரத்தை தயார்

செய்து, தானே அந்த கோவிலின் அறங்காவலர் என்றும், முதல் மரியாதை தனக்குத்தான் கொடுக்கப்பட வேண்டும் எனவும் ஆர்ப்பரித்தார்.

ஊர் மக்கள் எல்லோருமே தேவநாதன் பக்கம் திரண்டு நின்றதால், வெகுண்டெழுந்த பொய்யாமொழி கும்பாபிஷேகத்தன்று தனக்கு முதல் மரியாதை தரப்படாவிட்டால் பரிவட்டம் கட்டிக் கொள்ளும் தேவநாதனின் தலை துண்டிக்கப்படுவது உறுதி என சவால் விட்டதோடு நில்லாமல் நிலைமையை சமாளிக்க அடியாட்களை திரட்டி வைத்திருந்தார்.

தேவநாதன், ஒரு நல்ல காரியத்திற்காக தன் உயிர் போனாலும் அது இந்த அம்மன் சித்தமே என்று புன்னகை ததும்ப கூறிவிட்டார். ஆனால், மக்களோ தேவநாதன் என்ற நல்லவருக்கு அந்த தீயவனால் எந்த கொடுமையும் நடந்துவிடக்கூடாது என்ற அச்சத்திலேயே இருந்தனர்.

காலை நேரம், நான்காம் கால யாகங்கள் நடந்து கொண்டிருந்த நேரம், பரபரப்பாக அங்கு வந்தார், பண்டித சிகாமணி பத்மநாபன்! அவர் ஜோதிடம் மற்றும் வேதங்களை கரைத்துக் குடித்தவர், இந்த கோவில் கும்பாபிஷேகத்திற்கும் நாள் குறித்தவர் அவரே.

கவலையுடன் நின்றிருந்த ஊர் முக்கியஸ்தர்களை நெருங்கினார், இவர் ஊரின் நிலையையும் முக்கிய நபர்களின் தனி ஜாதக அமைப்பையும் அறிந்தவர்.

ஊர் முக்கியஸ்தர்களிடம் உடனே அய்யா தேவநாதனை யாகசாலைக்கு அழைத்து வாருங்ககள் அவர் முன்னிலையில் தான் கடங்கள் புறப்படும், என்றார். எல்லோருக்குமே திகைப்பு, அது எப்படி? அந்த பொய்யாமொழி மூர்க்கத்தனமான முடிவை எடுத்திருக்கிறார் அதை மீறி நாம் செயல்பட்டால் அது தேவநாதன் உயிருக்கு பாதகமாய் அமைந்து விட்டால்? என நடுங்கினர்.

அவர்களது எண்ணத்தைப் புரிந்து கொண்ட பத்மநாபன், உங்கள் எண்ணம் நியாயமானது தான் ஆனால், என் கணிப்பு தப்பாது, என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். இன்னும் சிறிது நேரத்தில் கோள்களின் நிலை மாறுகிறது. அதன் விளைவாக தேவநாதன் அய்யாவுக்கும் கும்பாபிஷேகத்திற்கும் ஒரு குறைவும் நேராது, நான் சொல்வதை நம்பி, தேவநாதனை அழைத்து வந்து ஏற்பாடுகளை கவனியுங்கள் விபரீதமாக எதுவும் நேராது, என்றார்.

அவர் சொல்வதை தட்டவும் முடியாமல், முழுதாய் நம்பவும் முடியாமல் சிறிது தயக்கத்துடனே ஒப்புக்கொண்டனர்.

தேவநாதனை அழைத்து வந்தனர், யாக சாலையில் நிறுத்தினர். எல்லாமே முறைப்படி நடந்தது. ஒவ்வொரு நிமிடமும் எந்த நேரத்தில் பொய்யாமொழி அடியாட்களுடன் வருவாரோ என்ற பீதியிலேயே நகர்ந்தது. கும்பாபிஷேகம் நடைபெறும் நேரம் தேவநாதன் உட்பட முக்கியஸ்தர்கள் கோபுரத்தின் மீது நின்றிருந்தனர். அப்போது ஓடி வந்த ஒருவன் பத்மநாப சாஸ்திரிகளின் காதுகளில் ஏதோ சொல்ல அம்மா, தாயே என பெருமூச்சு விட்டார்.

கும்பாபிஷேகம் இனிதே நடந்தது, கீழே இறங்கியவர்களிடம் பத்மநாபன் சொன்னார். பொய்யாமொழி, தன் அடியாட்களுடன் ஒரு வேனில் கோவிலை நோக்கி வரும்போது, அந்த வேன் நிலை தடுமாறி மரத்தில் மோதியதால், எல்லோருக்கும் பலத்த காயம் ஏற்பட்டு அனைவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதைக் கேட்டவர்கள், எல்லாம் அம்மன் செயல், என கோபுரத்தை நோக்க, அப்படியே இருக்கட்டும் ஆனால், நான் கணித்து சொன்னது வேறு, என பத்மநாபன் சொல்ல, எல்லோரும் அவரையே பார்த்தனர்.

அவர் மேலும் சொன்னார், இந்த அளவுக்கு பொய்யாமொழி சவால் விடக் காரணம், நம் தேவநாதன் அய்யாவுக்கு ஒரு கிரகம் கெட்டிருந்தது. அந்த கெட்ட கிரகமே இப்போது பலம் குன்றி வலுவே இல்லாமல் நீசமடைந்து விட்டது எனவே, கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம் என்ற ஜோதிட விதிப்படி தேவநாதனை சூழவிருந்த தீமை விலகிவிட்டது. எல்லாம் அந்த அம்மன் செயல், எனக்கூற அனைவரும் நிம்மதியடைந்தனர்.

~ ரா. பன்னீர்செல்வம்




VOPEC

TURMERIC & BLACK PEPPER

HI-HEALTH FORMULA

Navel Chakra & Detoxifier

Hi –health formula can be a solution for everyday health issues
Turmeric fights with free radicals & protects brain,
heart and liver cells from ageing process

call: 95660 00134

# எல்லா உயிருள்ள மற்றும் உயிரற்றவைகளின் மீது அன்பை செலுத்தவைக்கும் இந்துமதம்

இந்துமத தத்துவமானது எல்லா உயிருள்ள பொருட்கள் மீதும் எல்லோரும் அன்பு செலுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இந்துமதம் பல தெய்வ வழிபாடு உடையது. வீரத்திற்கு ஒரு தெய்வம், தனம் செழிக்க ஒரு தெய்வம், கல்விக்கு ஒரு தெய்வம், உணவிற்கு ஒரு தெய்வம், காதல் மற்றும் காமத்திற்கு ஒரு தெய்வம், காவலுக்கு ஒரு தெய்வம் என்று இந்துமதத்தில் பல தெய்வங்கள் வழிபாடு செய்யப்படுகிறார்கள். எல்லா தெய்வங்களிலும் மனித உருவங்களாகவே சித்தரிக்கப்படுவது ஏன் என்றால் நாம் பிற மனிதர்களிடம் அன்பை செலுத்தவேண்டும் என்ற நோக்கத்திற்காக தான். தெய்வங்களுக்கு வாகனமாக பசு, மயில், சிங்கம், மூஞ்ஜூரு என்று ஊர்வன, நடப்பன மற்றும் பறப்பன போன்ற விலங்கினங்கள் மற்றும் பறவைகள் சித்தரிக்கப்பட்டுள்ளது ஏன் என்றால் நாம் விலங்கினங்கள் மற்றும் பறவைகளிடத்திலும் அன்பை செலுத்தவேண்டும் என்பதற்காகத்தான்.



வழிபாட்டு ஸ்தலங்களில் ஸ்தல விருட்ச்சம் இருப்பது மரங்களையும் நாம் நேசிக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

ஆண் மற்றும் பெண் சமம் என்பதற்கு அர்த்தநாரீஸ்வரர் மற்றும் லிங்க ஆவுடை வழிபாடு. யானை மற்றும் மாருதி உருவில் தெய்வங்கள் இருப்பது விலங்கு மற்றும் பறவைகளையும் நாம் நேசிக்க வேண்டும் என்பதற்காகதான்.
கோள்களையும் மனித உருவில் வழிபாடு செய்வதும் எல்லா தெய்வங்கள் மற்றும் கோள்களுக்கு தானியம், மலர், மரம், ரத்தினம், உபரத்தினம், உடல் அங்கம் போன்றவைகளை பிரித்து கொடுத்து இருப்பது நாம் உயிருள்ள வற்றின் மீது மட்டும் அன்பு செலுத்தினால் மட்டும் போதாது, உயிரற்ற பொருட்கள் மீதும், நமது உடல் மீதும், அன்பு செலுத்த வேண்டும் என்பதற்காகதான்.
படைத்தல் மற்றும் காத்தலுக்கு தெய்வங்கள் இருப்பது போல் அழித்தலுக்கும் தெய்வம் இந்துமதத்தில் உண்டு ஏன் என்றால் இந்த பிறவி நிலையில்லாதது, அழியக்கூடியது. இந்த மானுட ஜென்மம் அழிவதற்குள் எல்லா உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருட்கள் மீதும் அன்பு செலுத்த வேண்டும் என்பதற்காகதான்.
எல்லா உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருட்களான மனிதரினம், ஊர்வன, நடப்பன, பறப்பன, புத்தகம், கணினி, தொலைக்காட்சி பெட்டி, வீடு, நிலம், வீட்டில் உள்ள அனைத்து பொருட்களிடமும் அன்பு செலுத்தி உயர்வான, அன்பான வாழ்வு வாழ்ந்து பூமியிலேயே சொர்கத்தை அடைவோம்.

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

# மூலிகை ரகசியம்

## கரிசலாங்கண்ணி (Eclipta Prastrata)

நம் அன்றாட வாழ்வில் எளிதாக கிடைக்கக் கூடியது கரிசலாங்கண்ணி என்னும் மூலிகையாகும். உடலை சுத்தம் செய்யும் ஆற்றல் கொண்டதால் இதனை காயசித்தி மூலிகை என்றும் கூறுவர்.

இந்த மூலிகை இரண்டு வகைகளில் காணப்படுகிறது. மஞ்சள் கரிசலாங்கண்ணி, வெள்ளை கரிசலாங்கண்ணி என இருவேறு வடிவம் கொண்டது. மஞ்சள் கரிசலாங்கண்ணியின் இலைகள் அடர்ந்த பச்சை நிறமும் மஞ்சள் நிற பூக்களைக் கொண்டது. சற்றே நீண்டும் குறுகிய அகலமும் வெள்ளை நிற பூக்களையும் கொண்டது வெள்ளை கரிசலாங்கண்ணி என அழைக்கப்படுகிறது.



சமையலில் கீரையாகப் பயன்படும் இந்த கரிசலாங்கண்ணியை வீட்டுத் தோட்டங்களிலும் வளர்க்கலாம். இந்த மூலிகை பெரும்பாலும் வயலோரங்கள், நீரோடும் வரப்புகளில் அதிகமாக வளரும் தன்மை கொண்டது.

தின்ற கரிசாலை நரை மாற்றும் தின்ற கரிசாலை திரை மாற்றும். தின்ற கரிசாலை என்றும் சிறுபிள்ளை தானே, என்று அகத்திய மகாகுரு சொன்னபடி, நரை, திரையை நீக்கி, என்றும் இளமையை வழங்கக் கூடியது இந்த கரிசலாங்கண்ணி என்னும் மூலிகை.

இதில்... வைட்டமின் ஏ மிகுந்து காணப்படுகிறது, இரும்பு சத்து அதிகம் கொண்ட மந்திர மூலிகையாய் விளங்குகின்றது, எனவே, இது சித்தியும் முக்தியும் அருள்கின்ற
"ஞானமூலிகை" என வள்ளல் பெருமான் வர்ணித்துள்ளார்.

### மருத்துவப் பயன்கள்

கல்லீரலின் இயக்கத்தை சீராக்குகிறது. ரத்தத்தில் ஆக்சிஜன் அளவை அதிகரித்து, சிவப்பு அணுக்களை அதிக பெருக வைப்பதால் சிவப்பு அணுக்கள் கூடும். இதனால் ரத்தசோகை சரியாகும், உடலில் உள்ள கழிவுகளை நீக்கி, உடலை உறுதியாக்கும். இரும்பு மற்றும் தங்க சத்துகளை தன்னகத்தே கொண்டுள்ளதால் தேகமும் மனமும் பலமாகும், மஞ்சள்காமாலை, உடல்சோர்வு ஆகியவை நீங்கும்.

பயன்படுத்தும் முறை

தினமும் காலையில் 5 இலைகளைப் பறித்து மென்று சாறை விழுங்கலாம், மென்றபின் திப்பியை வைத்து பல் துலக்கலாம், கபநீர், பித்தநீர் அனைத்தையும் வெளியேற்றும், சூரணம் செய்து பயன்படுத்தலாம். கசாயமாகவும் பயன்படுத்தலாம், இப்படி நேரடியாகவோ அல்லது உணவாகவோ தினசரி, சிறுக சிறுக சேர்த்துக்கொள்வது நல்லது.

சாதாரணமாக கீரை வியாபாரிகளிடம் கிடைக்கின்ற இந்த கரிசலாங்கண்ணி மூலிகையை தினமும் பயன்படுத்த தோட்டங்களில் வைத்து வளர்த்து பயன் பெறுங்கள் நோயற்ற உடலுடன் வாழுங்கள்.

~ ரா. பன்னீர்செல்வம்




~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்



## மேஷம்

- வீடு வாங்கல் விற்றல் துறையில் தொழில் செய்பவர்கள் இந்த மாதம் சிறந்த பலன்களைக் காண்பார்கள்.
- தங்களின் சரியான தொழில் முதலீடுகளின் மூலம் சிறந்த லாபத்தை அடைய முடியும்.
- தொழில் சார்ந்த பேச்சு வார்த்தைகள் நடக்கும் போது வாக்கு வாதங்களில் ஈடுபடாதீர்கள்.
- கணவன் மனைவி உறவு சிறப்பாக இருக்கும். உங்கள் வாழ்க்கைத் துணையுடன் பொழுதை போக்க பூங்கா, சினிமா தியேட்டர் போன்ற இடங்களுக்கு அழைத்துச் செல்வீர்கள்.
- வீட்டுத் தேவைக்கான செலவுகள் அதிகரிக்கும். இந்த மாதம் நீங்கள் கடினமான முயற்சிகள் எடுப்பதன் மூலம் உங்கள் வருமானத்தை உயர்த்திக் கொள்ள இயலும்.
- தொழில் அல்லது வியாபாரம் மேற்கொள்பவர்கள் பெரிய அளவிலான வாடிக்கையாளர்களைப் பெறுவீர்கள்.
- உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிக பணிச் சுமை இருந்த போதிலும் சிறப்பாக பணியாற்றுவீர்கள். மேலதிகாரிகள் உங்களின் செயல் திறனைப் பாராட்டுவார்கள்.
- உயர்கல்வி பயிலும் மாணவர்கள் பொறுமையுடன் கடினமாக உழைத்துப் படித்தால் வெற்றி நிச்சயம்.
- உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். அதனை தக்க வைத்துக் கொள்ள நீங்கள் உடற் பயிற்சி மற்றும் தியானம் போன்றவற்றை மேற்கொள்ளுங்கள்.

# ரிஷபம்



- மாணவர்களுக்கு கவனம் தவற வாய்ப்பு உள்ளது என்பதால் கவனமாகப் படிக்க வேண்டும்.
- உயர் கல்வி படிக்கும் மாணவர்களின் கிரகிக்கும் திறன் மேம்படும்.
- உங்கள் வருமானத்தைப் பெருக்கும் புதிய வழிமுறைகளை நீங்கள் நாடுவீர்கள். பொருளாதார நிலை மேம்படும்.
- நீங்கள் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த இது ஏற்ற நேரமாக இருக்கும்.
- குடும்பத்தில் அன்பும் மகிழ்ச்சியும் இருக்கும். அனைவரிடமும் சுமுகமான உறவு காணப்படும். இந்த மாதம் உறவு நிலைகளைப் பொறுத்த வரை மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.
- நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணையிடம் உண்மையான அன்பு செலுத்துவீர்கள். இதனால் மனதில் மகிழ்ச்சி பொங்கும். நீங்கள் உங்கள் துணையையும் அவரின் உணர்வுகளையும் புரிந்து நடந்து கொள்வதன் மூலம் நல்லுறவைப் பேண இயலும்.
- ஆரோக்கியத்தில் பெரிய அளவிலான பாதிப்புகள் ஏதும் இருக்க வாய்ப்பில்லை என்றாலும் சிறு சிறு உபாதைகள் வந்து போகும். அஜீரணக் கோளாறுகள் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது எனவே உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.
- நீங்கள் ஊடகங்களில் பணி புரிபவர் என்றால் இந்த மாதம் உங்களுக்கு அதிர்ஷ்டமான நேரம் என்று கூறலாம். நீங்கள் மற்றவர்களின் கருத்து மற்றும் ஆலோசனைகளைக் கேட்டு நடந்து கொள்வீர்கள்.



# மிதுனம்

- திருமணமான தம்பதிகள் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வார்கள். கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை நிலவும்.
- காதலர்களிடையே அன்னியோன்யம் பெருகும்.
- உறவினர்கள், நண்பர்கள் என அனைவரிடமும் நல்ல சுமுகமான உறவு நிலை இருக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.
- உங்கள் பணப்புழக்கம் இந்த மாதம் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது என்றாலும் நீங்கள் செலவு செய்ய மாட்டீர்கள்.
- சுயதொழிலில் இந்த மாதம் மந்த நிலை காரணமாக நீங்கள் கடின உழைப்பை மேற்கொள்ள மாட்டீர்கள். உங்கள் மனது ஊக்கத்துடன் இருந்தாலும் உங்கள் உடல் நிலை ஓய்வை நாடும். எனவே மற்றவர் உதவியுடன் நீங்கள் பணிகளை மேற்கொள்வது சிறப்பு.
- இந்த மாதம் உங்கள் தொழிலில் போட்டிகள் நிறைந்து காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். தொழிலில் வளர்ச்சி இருக்க வாய்ப்பு இருக்காது.
- மாணவர்கள் கவனச் சிதறலுக்கு ஆட்படுவார்கள்.
- உங்கள் ஆரோக்கியத்தில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். கடந்த காலங்களில் இருந்த நோய் மீண்டும் தலை தூக்க வாய்ப்புள்ளது. எனவே மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது நல்லது. உடற் பயிற்சி மேற்கொள்வதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை நீங்கள் தக்க வைத்துக் கொள்ள முடியும்.




# கடகம்

- இந்த மாதம் கிரகங்களின் அனுகூலமான நிலை காரணமாக உங்கள் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். உங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள நீங்கள் புதிய தொழில் முயற்சியில் ஈடுபடுவீர்கள். நீங்கள் ஆன்மீகக் காரியங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.
- உத்தியோகத்தில் உள்ள கடக ராசி அன்பர்களுக்கு இந்த மாதம் சிறப்பாக இருக்கும். உங்கள் திறமை மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்களுக்கு பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.
- சுயதொழில் செய்பவர்கள் தங்கள் வருமானத்தை உயர்த்திக் கொள்ள புதிய தொழிலைத் தொடங்குவீர்கள்.
- இந்த மாதம் நீங்கள் எதையும் யதார்த்தமாக எதிர் கொள்வீர்கள். மனதில் பட்டத்தை பளிச்சென்று கூறிவிடுவீர்கள். எனவே பிரச்சினைகளை சந்திக்க நேரும்.
- மாணவர்கள் கவனச் சிதறல் போன்ற தடைகளையும் தாண்டி கல்வியில் முன்னேறுவார்கள். தேர்வுகளை சிறப்பாக எழுதி நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள்.
- உயர்கல்வி படிப்பு படிக்கும் மாணவர்கள் சில தடைகளை சந்திப்பார்கள். கல்வியில் கவனம் சிதறும். பொழுதுபோக்கில் மனம் ஈடுபடும்.
- வயதில் மூத்தவர்கள். சர்க்கரை நோய் மற்றும் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.
- குடும்பத்தில் அமைதியும் நல்லிணக்கமும் இருக்கும்.



# சிம்மம்

- உயர் கல்வி படிக்கும் மாணவர்கள் பேராசிரியர் மற்றும் பெற்றோரின் ஆதரவைப் பெறுவார்கள். சிறப்பாக கல்வி பயின்று வெற்றி காண்பார்கள்.
- படித்து முடித்து வேலை தேடும் மாணவர்கள் சிறந்த சம்பளத்துடன் கூடிய வேலை கிடைக்கப் பெறுவார்கள்.
- வெளிநாடு சென்று படிக்க நினைக்கும் மாணவர்களின் விருப்பம் நிறைவேறும்.
- உத்தியோகத்தில் உங்கள் முன்னேற்றத்தில் எந்தவித தடையும் இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கு மேலதிகாரிகளின் அங்கீகாரமும் பாராட்டும் கிடைக்கும்.
- புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். அவர்கள் மூலம் நீங்கள் உதவி பெறுவீர்கள்.
- உங்கள் பொருளாதார நிலையும் சிறப்பாக இருக்கும்.
- உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.
- திருமணமான தம்பதியர் மனமொத்து வாழ்வார்கள்.
- இதனால் இருவருக்கும் இடையே அன்னியோன்யம் கூடும்.
- பங்கு நிறுவனங்களில் முதலீடு செய்ய இந்த மாதம் ஏற்ற காலமாக இருக்கும்.
- உங்களில் சிலருக்கு புதிய காதல் மலரும். இந்த மாதம் காதல் உறவு இனிமையாக இருக்கும்.




# கன்னி

- பள்ளியில் பயிலும் மாணவர்கள் கடுமையாக உழைத்துப் படிக்க வேண்டும்.
- சட்டம் மற்றும் பொருளாதாரம் மற்றும் தொழில் சார்ந்த கல்வியில் போட்டித் தேர்வு எழுதும் மாணவர்கள் சிறந்த வெற்றி காண்பார்கள்.
- மேல் படிப்பு வேண்டி வெளி நாடு செல்ல விரும்பும் மாணவர்களுக்கு இந்த மாதம் பொன்னான வாய்ப்பு கிட்டும் மாதமாக இருக்கும்.
- குடும்ப உறவுகள் சிறப்பாக இருக்கும்.
- கணவன் மனைவி உறவில் ஒற்றுமை கூடும். உங்கள் வாழ்க்கைத் துணைக்கு நேரம் ஒதுக்கி அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.
- உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.
- வியாபரிகள் சிறந்த லாபம் காண்பார்கள். உங்கள் கனவுகள் யாவும் நிறைவேறும் மாதமாக இந்த மாதம் இருக்கும்.
- புதிய தொழில் முதலீடுகளை செய்ய இந்த மாதம் உகந்தது.
- மருத்துவத் தொழில், சட்டம் மற்றும் எழுத்துத் துறையில் இருப்பவர்கள் இந்த மாதம் கணிசமாக பணம் சம்பாதிப்பார்கள்.
- உங்கள் திறமை மற்றும் படைப்பாற்றல் மூலம் தன நிலை உயரும்.
- உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணி நிமித்தமான பயணங்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். புதிய பொறுப்புகள் உங்களுக்கு அளிக்கப்படும்.
- உங்கள் பதவி உயர்வு மற்றும் ஊதிய உயர்விற்கு நீங்கள் இன்னும் சிறிது காலம் பொறுமையாக இருக்க வேண்டும்.
- புதிய தொழில் வாய்ப்புகள் மூலம் உங்கள் வருமானம் பெருகும். கடன்கள் அடையும்.



# துலாம்

- பள்ளியில் படிக்கும் மாணவர்கள் தங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பது சிறிது கடினமாக இருக்கும். உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம்.
- உயர்கல்வி பயிலும் மாணவர்கள் விடா முயற்சி என்ற கொள்கையை பின்பற்றினால் வெற்றி பெற இயலும்.
- உத்தியோகத்தில் உள்ளவர்கள் சில சவால்களை சந்திக்க நேரும்.
- உத்தியோகத்தில் பதவி உயர்வு கிட்டும் என்றாலும் அது உங்களுக்கு மன திருப்தியை அளிக்காது.
- கூட்டுத் தொழில் செய்பவர்கள் கூட்டாளிகள் மூலம் சில பிரச்சினைகளை சந்திக்க நேரும். அதனால் உங்கள் இலக்குகளை அடைய இயலாமல் போகலாம். நீங்கள் திறமையுடன் செயல்பட்டால் தான் வெற்றி காண இயலும்.
- இந்தமாதம் உங்கள் பொருளாதார நிலையில் சற்று இறக்கம் காணப்படும்.
- மனபதட்டம் காரணமாக இந்த மாதம் உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும். வீட்டிலும், அலுவலகத்திலும் அதிக பணிகள் காரணமாக உங்கள் உடல் நிலை பாதிக்கப்படும்.
- திருமணத்திற்குக் காத்திருப்பவர்கள் இந்த மாதம் மனதிற்குப் பிடித்த தக்க துணையைக் கண்டு கொள்வார்கள். தம்பதிகள் இருவரும் கருத்தொருமித்து வாழ்வீர்கள்.
- காதல் உறவில் அன்யோன்யம் கூடும்.




# விருச்சிகம்

- விருச்சிக ராசி மாணவர்களுக்கு சென்ற மாதத்தை விட இந்த மாதம் சிறப்பானதாக இருக்கும். என்றாலும் நீங்கள் கவனச் சிதறலுக்கு ஆளாகாமல் இருக்க வேண்டும். நீங்கள் சிறப்பாக கல்வி பயிலவும், கடின உழைப்பை மேற்கொள்ளவும் ஊக்குவிக்கப்படுவீர்கள்.
- ஆராய்ச்சி கல்வி படிக்கும் மாணவர்கள் வெற்றி காண்பார்கள்.
- இந்த மாதம் உங்கள் ஆரோக்கியம் சுமாராக இருக்கும். பெரிய அளவிலான பாதிப்புகள் ஏதும் இருக்காது. உங்கள் வாழ்க்கைத் துணையின் ஆதரவு உங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்தும்.
- உத்தியோகத்தில் உள்ளவர்கள் சாதகமான பலன்களை எதிர்பார்க்கமுடியாது. உங்கள் கடின உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்காது. அதன் காரணமாக நீங்கள் உற்சாகம் இழக்கலாம்.
- இந்த மாதம் கூட்டுத் தொழில் உங்களுக்கு லாபத்தை அளிக்கும். தொழில் ஒப்பந்தம் சார்ந்த ஆவணங்களில் கையொப்பமிடுமுன் கவனம் தேவை.
- உங்கள் வாழ்க்கைத் துணையுடன் கருத்து ஒருமித்து உறவை மேம்படுத்த நீங்கள் விரும்புவீர்கள். என்றாலும். பண விஷயம் அல்லது பூர்வீக சொத்து சம்பந்தமான பிரச்சினை காரணமாக உங்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்படும்.
- காதல் உறவில் நல்லிணக்கம் காண நீங்கள் கடின முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். எனவே நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். விட்டுக் கொடுத்து செல்வதன் மூலம் நீங்கள் உறவில் அமைதியை தக்க வைத்துக் கொள்ள இயலும்.



# தனுசு

- பள்ளிக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இந்த மாதம் சிறப்பான மாதமாக இருக்கும். மாணவர்கள் பதட்டமின்றி செயல்படுவார்கள்.
- தொழில் நுட்பத் துறை மாணவர்கள் கவனம் செலுத்தி கல்வி பயில்வார்கள்.
- முதுகலை பட்டம் படிக்கும் மாணவர்கள் சிறந்த முறையில் வெற்றி காண்பார்கள்.
- சுய தொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்கு இது சிறந்த மாதமாக இருக்கும். தொழிலில் லாபம் கூடும்.
- உத்தியோகத்தில் உள்ளவர்கள் இந்த மாதம் தங்களின் முயற்சிகளுக்கு பாராட்டைப் பெறுவீர்கள். உங்கள் செயலதிறனுக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.
- மலச்சிக்கல் போன்ற வயிறு சம்பந்தமான உபாதைகள் வருவதற்கு வாய்ப்பு உள்ளது என்பதால் உங்கள் உணவில் கவனம் செலுத்த வேண்டும்.
- திருமணம் தாமதம் ஆனவர்களுக்கு திருமண முயற்சிகள் கைகூடும்.
- காதலர்கள் தங்களின் வாழ்க்கைத் துணையை வெளியிடங்களுக்கு அழைத்துச் சென்று மகிழ்விப்பதற்கு இந்த மாதம் சாதகமாக இருக்கும். இதனால் இருவருக்கும் இடையே அன்பும் நெருக்கமும் அதிகரிக்கும்.




# மகரம்

- கல்வி பயிலும் மாணவ மாணவியர்களுக்கு இந்த மாதம் சிறப்பான மாதம் என்றாலும் பட்டப் படிப்பு படிக்கும் மாணவர்கள் படிப்பிற்கென நேரம் ஒதுக்கிப் படித்தால் தான் சிறந்த வெற்றிகளைக் காண முடியும்.
- தொழில் மற்றும் வியாபாத்தில் ஈடுபட்டிருக்கும் மகர ராசி அன்பர்கள் தாங்கள் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்த வங்கிக் கடன்கள் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது.
- புதிய தொழிலுக்கான முதலீடுகளை இந்த மாதம் செய்வது நன்மை பயக்கும்.
- உத்தியோகத்தில் இருப்பவர்கள் சில பொருளாதார பிரச்சினைகளை சந்திக்க நேரும்.
- அனுசரித்தும் விட்டுக் கொடுத்தும் செல்வதன் மூலம் கணவன் மனைவி உறவில் நெருக்கம் அதிகரிக்கும்.
- உடல் ஆரோக்கியத்தில் சிறிது கவனம் தேவை. தினமும்  உடற்பயிற்சி செய்வதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை நீங்கள் பாதுகாத்துக் கொள்ள இயலும்.
- குடும்பத்தில் அமைதி நிலவ  நீங்கள் சண்டை மற்றும் வாக்கு வாதத்தை தவிர்க்க வேண்டும்.
- காதல் முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.
- திருமணத்திற்குக் காத்திருப்பவர்களுக்கு இந்த மாதம் தக்க துணையை தேர்ந்தெடுக்க உகந்த மாதம் ஆகும். திருமணமான தம்பதிகள் இடையே ஒற்றுமை நிலவும்.



# கும்பம்

- பள்ளியில் பயிலும் மாணவர்கள் கவனம் சிதறாமல் கல்வி பயில வேண்டும். கவனமாக படித்தால் வெற்றி நிச்சயம்.
- பட்டப்படிப்பு இறுதி ஆண்டு மாணவர்களுக்கு படிப்பு முடித்தவுடன் வேலை கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.
- உத்தியோகத்தை பொறுத்தவரை முன்னேற்றத்தில் மந்த நிலை இருக்கும். இது உங்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கும். கடினமாக உழைத்தாலும் அதற்குரிய பலன் கிடைப்பது அரிதாக இருக்கும்.
- சுய தொழிலை வெற்றிகரமாக நடத்த புத்திசாலித்தனமாக செயல்பட்டு தொழிலை பெரிய அளவில் எடுத்துச் செல்ல தெளிவான முடிவுகளை எடுக்கும் வாய்ப்பு உள்ளது.
- பொருளாதாரத்தைப் பொறுத்தவரை இந்த மாதம் உங்களுக்கு சற்றே அனுகூலமான நிலை இருக்கும். பணப் புழக்கம் மந்தமாக இருக்கும். உங்கள் செலவுகளை குறைத்துக் கொள்ள வேண்டும்.
- தங்களின் நோய் எதிர்ப்புத் திறன் அதிகரிக்கும். அதன் காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். பெரிய அளவிலான ஆரோக்கிய பாதிப்புகள் ஏதும் இருக்காது. உங்கள் உடல் வலிமை கூடும். நோய் வந்தாலும் எளிதில் குணமாகும்.
- உங்கள் வாழ்க்கைத் துணைக்கு தேவையானதை வாங்கிக் கொடுத்து அவர்களை மகிழ்விப்பீர்கள். அவர்களுடன் உங்கள் பொன்னான நேரத்தை செலவு செய்வீர்கள். இதனால் குடுமபத்தில் மகிழ்ச்சி பொங்கும்.



# மீனம்

- பள்ளியில் கல்வி பயிலும் மாணவர்கள், ஆசிரியர் மற்றும் பெற்றோரின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றினால் எளிதில் வெற்றி பெறலாம்.
- போட்டித் தேர்வு எழுதும் மாணவர்கள் வெற்றியை காண கடுமையாக உழைக்க வேண்டும்.
- சுய தொழில் செய்பவர்கள் அதிகமான லாபங்களை பெறக்கூடிய மாதமாகும்.
- வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களும் கணிசமான வருமானம் காண்பார்கள்.
- வியாபாரம் செய்பவர்கள் தங்கள் விற்பனை அதிகரிக்கக் காண்பார்கள்.
- எழுத்துத் துறை, நடிப்புத் துறை மற்றும் கலைத் துறையில் இருப்பவர்கள் சிறந்த வகையில் வருமானம் ஈட்டுவார்கள்.
- உத்தியோகத்தில் இருக்கும் மீன ராசி அன்பர்கள் அங்கீகாரம் பெற சிறிது கடினமாக உழைக்க வேண்டியிருக்கும். கடினமாக உழைத்தாலும் சிறிய அளவில் தான் அதற்குரிய பலனைப் பெற இயலும்.
- திருமணமான தம்பதிகள் தங்கள் வாழ்க்கைத் துணைக்கென நேரம் ஒதுக்க இயலாத காரணத்தால் உறவில் அதிருப்தியும் மகிழ்ச்சியின்மையும் இருக்கும்.
- தாய் வழி உறவினர்களிடம் சில கருத்து வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.
- மீன ராசி காதலர்கள் தனது துணையின் மூலம் பரிசுப்பொருள் கிடைக்கப் பெறுவார்கள்.

அனைத்து ஜோதிட, புரோஹித மற்றும் ஆன்மிக சேவைகளுக்கு
தொடர்புகொள்ள: **88702 88701**